දුරකථන ) 011 2669192 , 011 2675011
தொலைபேசி ) 011 2698507 , 011 2694033
Telephone ) 011 2675449 , 011 2675280

ෆැක්ස් ) 011 2693866
பெக்ஸ் ) 011 2693869
Fax ) 011 2692913

විද්‍යුත් තැපෑල )
postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )

මගේ අංකය )
எனது இல ) FHB/AH/Gen/2017
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 25/07/2017
Date )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

# සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

பொது சுற்றுநிருப இல:- 01-43/2017

சகல மாகாண செயலாளர்கள், சுகாதாரம்
சகல மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்கள்,
சகல பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்கள்,
சகல பணிப்பாளர்கள்/மருத்துவ நிறுவனப் பொறுப்பாளர்கள்
சகல பணிப்பாளர்கள், விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்
பணிப்பாளர், தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனம்
தலைவர், சுகாதார மருத்துவ உத்தியோகத்தர், மாநகர சபை, கொழும்பு.
சகல சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள்

## கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவத்தினருக்கான நட்புணர்வான சுகாதார சேவைகளை களநிலையில் வழங்குதல்

பாடசாலைக்கு செல்லும் மற்றும் செல்லாத கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவத்தினருக்கான களநிலை சுகாதார சேவைகளை வழங்குதல் தொடர்பான 01.10.2010 திகதியிடப்பட்ட 01-36/2010 இலக்கத்தினையுடைய சுற்று நிருபம் இத்தால் இரத்துச்செய்யப்படுகிறது.

சுகாதார வைத்திய அதிகாரி கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவத்தின்ருக்கான் சுகாதார நிகழ்ச்சித்திட்டத்திற்கு முழுமையான பொறுப்புடையவர்களாவர்.

கட்டிளம் பருவ மற்றும் இளமைப் பருவ நட்புணர்வான சுகாதார சேவைகள் நிகழ்த்துவதன் உயர் தரத்தில் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக கள நிலை மற்றும் பிணியாய்விற்கான அவசியமான படிகளினை சுகாதார வைத்திய அதிகாரி எடுத்தல் வேண்டும். தீர்மானிக்கப்பட்ட திகதியில் (உதாரணமாக நான்காவது சனிக்கிழமை காலையில்) ஆகக்குறைந்தது ஒன்று அல்லது இரண்டு கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவ நட்புணர்வான சுகாதார பிணியாய்வு நிலையங்கள் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அல்லது கள பிணியாய்வு நிலையத்தில் நடத்தப்படல் வேண்டும். இவ் பிணியாய்வு பொது சுகாதார தாதி சகோதரி, மேற்பார்வை குடும்ப சுகாதார உத்தியோகத்தர், குடும்ப சுகாதார உத்தியோகத்தர், மற்றும் ஏனைய பொது சுகாதார உத்தியோகத்தர்களின் ஆதரவுடன் சுகாதார வைத்திய அதிகாரிகளால்/மேலதிக சுகாதார வைத்திய அதிகாரிகளால் நடாத்தப்பட

வேண்டும். காலாண்டறிக்கை குடும்ப சுகாதார பணியகம் மற்றும் தாய், சேய் நல வைத்திய அதிகாரிக்கு (MOMCH) அனுப்பப்படல் வேண்டும். மேலும் கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவத்தினருக்கான நட்புணர்வான சுகாதார சேவைகள் பிணியாய்வுடன், போஷணை மதிவளத்துணையும் கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவத்தினருக்கான போஷணைப்பிணியாய்வில் வழங்கப்பட வேண்டும்.

10 தொடக்கம் 24 வயதிற்கிடைப்பட்ட இளமைப் பராயத்தினரிடையே கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவத்தினருக்கான நட்புணர்வான சுகாதார சேவை பிணியாய்வு சேவைகளைப் பரப்புவதற்கான போதுமானளவு படிகளினை பாடசாலைகளில், தொழிற்துறை பயிற்சியளிக்கப்படும் நிலையங்கள், இளைஞர் அணிகள், மற்றும் வேலைத்தளங்கள் போன்றவற்றில் எடுக்கப்பட வேண்டும். பெற்றோர்களிடையேயும் சமூகங்களிடையேயும் இது பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இளம் பராயத்தினர் பாடசாலை மருத்துவ பரிசோதனை ,குடும்ப சுகாதார உத்தியோகத்தரின் வீட்டுத்தரிசிப்பு, பொது சுகாதார பரிசோதகரால் பாடசாலைகளில் நடத்தப்படும் கூட்டத் தொடர்/ தொழில் ரீதியான மற்றும் தொழில் முறை பயிற்சி அமைப்புகள். சுகாதார வைத்திய உத்தியோகத்தர் மற்றும் அலுவலர்கள் கல்வி சார் நிறுவனங்கள், தொழில் முறைப் பயிற்சி நிலையங்கள், சமூக சேவை பிரிவுகள் மற்றும் பிரதேச செயலகம் அதனுடனும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றுடனும் கூட்டாண்மையினை விருத்தி செய்ய இளம் பராயத்தினருக்கு சில வசதிகளை ஏற்படுத்த வேண்டும். சேவை வழங்குநர்களால் சுகாதார துறை சார்ந்த மற்றும் சாராத அவசியமான பரிந்துரைகள் பொது சுகாதார தாதி சகோதரி, மேற்பார்வை குடும்ப சுகாதார உத்தியோகத்தர், மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் கொண்ட குழுவின் உதவியுடன் வழங்கப்பட வேண்டும். சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டுதலின் பேரில் பாடசாலைக்கு செல்லாத கட்டிளம் பருவத்தினரை பராமரிக்கும் பொறுப்பு குடும்ப சுகாதார உத்தியோகத்தருக்குரியது. இக்குழுவிற்கு அவர்களுடைய வேலைத்தளங்களில் பொது சுகாதார பரிசோதகர் சுகாதார கல்வி தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களினை நடத்துதல் வேண்டும்.

**குடும்ப சுகாதார உத்தியோகத்தரின் பங்குகளும் பொறுப்புகளும்.**

- குழந்தைகளை அவர்களின் 18 வயது வரை அவர்களின் பிறப்பு மற்றும் நிர்ப்பீடன பதிவுகளை பேணுவதன் மூலம் அவர்களை கண்காணித்து தொடர் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். பாடசாலை ஆரம்பித்த மற்றும் விலகிய திகதிகள் குறிக்கப்பட்ட நிரல்களில் குறியிட்டுக் காட்டப்பட வேண்டும்.
- அடிக்கடி பாடசாலைக்கு சமூகமளிக்காமை கண்காணிக்கப்பட வேண்டும் என்பதுடன் இது பற்றி பாடசாலை நிர்வாகத்துடனும் குறிப்பாக பாது காவலருடன் கலந்துரையாட வேண்டும். சகல பாடசாலை விலகியோர் பற்றி கணிப்பிடப்பட வேண்டும் என்பதுடன் அவற்றில் சுகாதார நிலமை காரணமாக விலகியோர் என சுகாதார வைத்திய உத்தியோகத்தர் மற்றும் சுகாதாரக் குழுவினால் உறுதி செய்யப்பட்டு தீர்வு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- வீட்டுத்தரிசிப்பின் போது கடடிளம் பருவத்தினரை அவர்களிற்குரிய குடும்ப பதிவேட்டில் பதிய வேண்டும். தகுதியான குடும்பங்களைச் சேர்ந்த கட்டிளம்

பருவத்தினரை பதிவு செய்யும் போது பதிவேட்டிலுள்ள தகுதியான குடும்பத்தின் அதே கிடை வரிசையில் பதியப்படல் வேண்டும். தகுதியான குடும்பத்தினரை சாராத கட்டிளம் பருவத்தினர் இவ் குழுவிற்காக ஒதுக்கப்பட்ட தகுதியான குடும்பப் பதிவேட்டின் இறுதிப் பக்கத்தில் பதியப்படல் வேண்டும்.

- வீட்டுத்தரிசிப்பின் போது ஆபத்தான அல்லது ஆரோக்கியமற்ற நிலையில் உள்ள கட்டிளம் பருவத்தினரை அடையாளம் காண வேண்டும். அவர்களிற்கு அவசியமான உளவளத்துணையினை வழங்குவதுடன் அவர்களை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அல்லது வைத்தியசாலையில் நடத்தப்படும் கட்டிளம் பருவ மற்றும் இளம் பருவத்தினருக்கான நட்புணர்வான சுகாதார சேவை நிலை பிணியாய்வில் கட்டிளம் பருவத்தினரை கேட்கவும். ஆபத்து நிலையிலுள்ள கட்டிளம் பருவத்தினரை அடையாளப்படுத்தி அவர்களை தொடர் கண்காணிப்பிற்கு உட்படுத்த வேண்டும்.

- வீட்டிலும் கள நிலையிலும் கட்டிளம் பருவத்தினருக்கு பாலியல் மற்றும் இனவிருத்தி சுகாதாரம் பற்றி முடிவெடுக்கும் திறனை அதிகரிப்பதற்கு சுகாதாரத்தில் விருத்தி செய்யப்பட்ட குடும்ப சுகாதார உத்தியோகத்தரின் தொகுப்பினை பயன்படுத்துவதன் மூலம் கல்விச் செயற்பாடுகளை நிகழ்த்த் வேண்டும்.

- பாடசாலைக்கு செல்லாத கட்டிளம் பருவத்தினர் அவர்கள் இளவயதில் கர்ப்பமடைவதை தவிர்ப்பது பாதுகாப்பது; பாலியல் சம்பந்தமான தொற்று நோய்கள் மற்றும் வேறு ஆபத்தான நடத்தைகளிலிருந்து தம்மை பாதுகாப்பது போன்றவை தொடர்பாக முடிவெடுக்கும் திறனை விருத்தி செய்ய சுகாதார கல்வியுடன் இணைந்த குழுச்செயற்பாடுகளை கட்டிளம் பருவ பாலியல் மற்றும் இனவிருத்தி சுகாதார சேவைகளை வழங்குவது தொடர்பாக உருவாக்கப்பட்ட குடும்ப நல உத்தியோகத்தருக்கான கையேட்டினை பயன்படுத்தி நடாத்த வேண்டும்.

- இள வயதில் கர்ப்படைதல், வேறு இனவிருத்தி சுகாதார பிரச்சனைகளான பாலியல் தொற்றுகள், HIV எயிட்ஸ் மற்றும் பாடசாலைகளில் கட்டிளம் பருவத்தினரிடையே போதைப்பொருட்கள் பாவனை என்பவற்றை குறைப்பதற்கு அவர்களிற்கு சக்தியளிக்குமுகமாக இனவிருத்தி சுகாதாரம் மற்றும் வாழ்க்கைத்திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களினை நிகழ்த்துவதற்கு சுகாதார வைத்திய உத்தியோகத்தர், பொது சுகாதார தாதி சகோதரி, பொது சுகாதார பரிசோதகர் மற்றும் ஆசிரியர்களிற்கு உதவியளித்தல்.

- பிரதேசத்தின் வைத்தியசாலை சுகாதார சேவை வழங்குநர்களுடன் இணைந்து அங்கு நடத்தப்படும் கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவத்தினருக்கான நட்புணர்வான சுகாதார சேவைகள் பிணியாய்வில் செயற்படல் வேண்டும். வைத்தியசாலை மற்றும் கள நிலையில் நடைபெறுகின்ற கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவத்தினருக்கான நட்புறவான சுகாதார சேவைகள் பிணியாய்வு குறித்து கட்டிளம் பராயத்தினர், இளைஞர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூகங்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

- குறிப்பிட்ட வருடத்தில் இரும்பு ஃபோலேற்றினைப் பெற்றுக் கொள்ளாத பாடசாலைக்குச் செல்லாத கட்டிளம் பருவத்தினரிற்கு வாராந்தம் இரும்பு ஃபோலேற் வில்லையினை வழங்க வேண்டும்.

- வாராந்த இருப்பு ஃபோலேற்றினை ஆரம்பிப்பதற்கு முன்னர், மெபன்டசோல் ஒரு குளிகை (500 மி.கி) கொடுக்கப்பட வேண்டும். அதற்கு பின்பு வாராந்த இரும்பு/போலேற் வில்லைகளை(WIFS) கீழ் குறிப்பிட்டுள்ளவாறு கொடுக்கப்பட வேண்டும், வருடத்தில் 6 மாதங்களிற்கு (24 கிழமைகள்)

| குளிகை | செறிவு | குளிகைகளின் எண்ணிக்கை(ஒரு கிழமைக்கு) | காலம் (கிழமைகள்) |
|---|---|---|---|
| இரும்பு | $FESO_4$ 200 மி.கி | 1 | 24 |
| ஃபோலிக்கமிலம் | 1 மி.கி | 1 | 24 |
| விற்றமின் C | 100 மி.கி | 1 | 24 |

(மேலதிக தகவல்களிற்கு பாடசாலை செல்லும் குழந்தைகளிற்கான இருப்பு ஃபோலேற் குறை நிரப்பு வழங்கல் (2013 ஆம் ஆண்டிலிருந்து) தொடர்பான 25.03.2013 திகதியிடப்பட்ட 02-0812007(1) எனும் இலக்கமிடப்பட்ட பொது சுற்று நிருபத்தினை பார்க்கவும் அதே அட்டவணை பாடசாலை செல்லாத குழந்தைகளிற்கும் பொருந்தும்.)

- கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவத்தினருக்கான நட்புறவான சுகாதார சேவைகள் பிணியாய்வு நிலையத்திற்கு தேவையுள்ள கட்டிளம் பருவத்தினரை அனுப்புதல் வேண்டும் என்பதுடன் அப்பிணியாய்வினை ஓழுங்குபடுத்தி நிகழ்த்துவதற்கு உதவிபுரிவதுடன் அவர்களை தொடர் கண்காணிக்க உதவ வேண்டும்.
- 7ம் வகுப்பிலிருந்து 10 ம் வகுப்பு வரையான கட்டிளம் பருவத்தினரை பரிசோதனை செய்வதற்கு சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகர் ஆகியோரிற்கு உதவிபுரிதல். பெண் பிள்ளைகளை ஆண் வைத்திய அதிகாரி ஒருவரால் பரிசோதனை செய்யும் போது கட்டாயமாக பெண் சுகாதார சேவை வழங்குநர் இருத்தல் வேண்டும்.
- உளவளத்துணை தேவைப்படும் பிள்ளைகளை அடையாளப்படுத்துவதற்கு பொது சுகாதார பரிசோதகரிற்கு உதவிபுரிதலுடன் பாடசாலையிலோ அல்லது சுகாதார வைத்தியர் அதிகாரி பிணியாய்வு நிலையத்திலோ உளவளத்தணை சேவைகளை வழங்குதல்.
- குழந்தைகளிற்கு ஆரோக்கியமான வாழ்க்கை முறைகள் பற்றி கற்பித்தலும் பாடசாலை மற்றும் வீடுகளில் அதனை பழகிக் கொள்வதற்கு ஏற்புடைய சூழலை ஏற்படுத்திக் கொள்வதற்கு உதவி புரிதல்.
- கட்டிளம் பருவத்தினரை அவர்களுடைய வீடுகளிலும் சந்திப்பதுடன் பாடசாலை மருத்துவ ஆய்வில் அவர்களிடத்தே அடையாளங்கண்ட சுகாதாரம் சம்பந்தமான பிரச்சனைகளை நிவர்த்தி செய்தல்.

- பாடசாலை அதிகாரிகள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களிற்கு ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பாடசாலைகளை உருவாக்கவும் கட்டிளம் பருவத்தினரிற்கான ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சிகளை நிகழ்த்துவதற்குமான உதவிகளை வழங்குதல்.
- அப்பிரதேசத்திலுள்ள கட்டிளம் பருவத்தினர் ருபெல்லா மற்றும் இருகூட்டு தடுப்பு மருந்தினை (aTd) தேசிய வழிகாட்டுதல்களிற்கமைவாக பெற்றுக்கொண்டார்களா என்பதனை உறுதிப்படுத்தல்.
- பயிற்சி நிலையங்களிலுள்ள இளமைப்பருவத்தினர் பயிற்சியாளர்களிற்கான மருத்துவ பரிசோதனையில் சுகாதார வைத்திய அதிகாரிக்கு உதவியளித்தல்.

**பொது சுகாதாரப் பரிசோதகரின் பங்குகளும் பொறுப்புகளும்.**

- பாடசாலை சுகாதார நிகழ்ச்சித்திட்டத்திற்கு மேலதிகமாக 01-37/2007(1) இலக்கமிடப்பட்டு 06.01.2016 திகதியிடப்பட்ட பொது சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பாடசாலை செல்லும் கட்டிளம் பருவத்தினர், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகங்களிடையே கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவத்தினருக்கான நட்புறவான சுகாதார சேவைகள் தொடர்பான விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்களினை நிகழ்த்த வேண்டும்.
- பாடசாலைக்கு செல்லாத கட்டிளம் பருவுத்தினர் மற்றும் இளமைப்பருவத்தினரிடையே அவர்களுடைய வேலைத்தளங்களில் கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவத்தினருக்கான நட்புறவான சுகாதார சேவைகள் பற்றிய விழிப்புணர்வினை அதிகரித்தல்.
- பாடசாலைக்கு செல்லாத தொழில்புரியும் கட்டிளம் பருவுத்தினருக்கான சுகாதார கல்வி செயற்பாடுகள் மற்றும் வாழ்க்கைத்திறன் போன்றவற்றை விருத்தி செய்யும் செயற்பாடுகளை அவர்களுடைய வேலைத்தளங்களில் நிகழ்த்த வேண்டும்.
- கட்டிளம் பருவத்தினர் மற்றும் பயிற்சி நிலையங்களிலுள்ள இளைஞர்களிற்கான மருத்துவ ஆய்வில் சுகாதார வைத்திய அதிகாரிக்கு உதவியளித்தல்.

**மேற்பார்வை குடும்ப சுகாதார உத்தியோகத்தரின் பங்குகளும் பொறுப்புகளும்**

- பிரதேசத்தில் உள்ள கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவத்தின்ருக்கான சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தினை திட்டமிடுதல் மற்றும் அமுல்படுத்துவது தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார தாதி சகோதரிக்கு உதவிபுரிதல்.
- குடும்ப சுகாதார உத்தியோகத்தரினால் நிகழ்த்தப்படும் கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவத்தினருக்கான நட்புணர்வான சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களினை கண்காணித்தலும் மேற்பார்வை செய்தலும்.

**பொது சுகாதார தாதி சகோதரியின் பங்குகளும் பொறுப்புகளும்**

- பிரதேசத்தில் நிகழ்த்தப்படும் கட்டிளம் பருவத்தினருக்கான சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தினை திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தவது தொடர்பாக சுகாதார வைத்திய உத்தியோகத்தருக்கு உதவிபுரிதலும் குடும்ப சுகாதார உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகளை மேற்பார்வை செய்ய வேண்டும்.

- சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்தில் அல்லது கள நிலையில் கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவத்தினருக்கான நட்புணர்வான பிணியாய்வற்கு உதவி புரிய வேண்டும்.

**மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகரின் பங்குகளும் பொறுப்புகளும்**

- பொது சுகாதார பரிசோதகரினால் நிகழ்த்தப்படும் கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவத்தினருக்கான சுகாதார நிகழ்ச்சித் திட்டங்களினை அமுல் படுத்துவதற்கு உதவிபுரிவதுடன், மேற்பார்வை செய்து அவதானிக்க வேண்டும்.
- **சுகாதார வைத்திய அதிகாரியின் பங்குகளும் பொறுப்புகளும்**
  சுகாதார வைத்திய அதிகாரி அவர்களுடைய பிரதேசத்தில் ஆகக்குறைந்தது ஒரு கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவத்தினருக்கான நட்புறவான சுகாதார சேவைகள் பிணியாய்வு நிலையத்தினை உருவாக்க வேண்டும் என்பதுடன் சமூகத்திற்கு இச்சேவைகள் பற்றி தெரியப்படுத்துதல் வேண்டும்.
- நான்கு கிழமைகளிற்கு ஒரு தடவை போஷணைப் பிணியாய்வு நிலையத்தை நடத்த வேண்டும்.
- கட்டிளம் பருவத்தினர் மற்றும் பயிற்சி நிலையங்களிலுள்ள இளைஞர் பயிற்சியாளர்களிற்கான மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.
- பயிற்சி நிலையங்களில் சுகாதாரம் சார்ந்த கல்விப்பகுதிக்கு வள ஆளணியாக பங்கு பற்றல்.
- விசேட தேவைகளையுடைய கட்டிளம் பருவத்தினரிற்கு உதவும் முகமாக ஆதரவு வழங்கும் சேவைகளான சமூக சேவைகள் போன்றவற்றுடன் உறவுகளை விருத்தி செய்ய வேண்டும்.
- ஒவ்வொரு மாதாந்த கருத்தரங்கிலும் களத்தில் கட்டிளம் பருவ மற்றும் இளமைப்பருவத்தினரிற்காக நடைபெறும் செயற்பாடுகளை கண்காணித்தலும் மீளாய்வு செய்தலும்.

மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர்கள் மற்றும் நிறுவனத்தலைவர்கள் அவர்களுடைய பிரதேசங்கள் மற்றும் நிறுவனங்களில் மேற்குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்கள் செயல்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Dr. J. M. W. Jayasundara Bandara
(Acting)
Dire... ...edicine
Minis...
...Mawatha,
385, Rev. ... Colombo 10.

வைத்தியர். ஜெ.எம்.டபிள்யு. ஜயசுந்தர் பண்டார

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:

செயலாளர், சுகாதார, போஷணை மற்றும் சுதேஷ வைத்திய அமைச்சு.

மேலதிக செயலாளர், மருத்துவ சேவைகள், சுகாதார, போஷணை மற்றும் சுதேஷ வைத்திய அமைச்சு.

மேலதிக செயலாளர், பொது சுகாதார சேவைகள், சுகாதார, போஷணை மற்றும் சுதேஷ வைத்திய அமைச்சு.

பிரதி பணிப்பாளர் நாயகம் - பொது சுகாதார சேவைகள் 1&11, சுகாதார, போஷணை மற்றும் சுதேஷ வைத்திய அமைச்சு.

பிரதி பணிப்பாளர் நாயகம் - மருத்துவ சேவைகள், சுகாதார, போஷணை மற்றும் சுதேஷ வைத்திய அமைச்சு.

பிரதி பணிப்பாளர் நாயகம் - திட்டமிடல், சுகாதார, போஷணை மற்றும் சுதேஷ வைத்திய அமைச்சு.

பிரதி பணிப்பாளர் நாயகம் - ET & R , சுகாதார, போஷணை மற்றும் சுதேஷ வைத்திய அமைச்சு.

பிரதி பணிப்பாளர் நாயகம் - ஆய்வு கூட சேவைகள், சுகாதார, போஷணை மற்றும் சுதேஷ வைத்திய அமைச்சு.

சகல மருத்துவ சேவைகள், தாய், சேய் நலன்.

தலைவர்கள்

நாட்டு பிரதிநிதிகள் - WHO/UNFPA/UNICEF/World Bank/World Food Programme